## 9th Social Science Lesson 21 Questions in Tamil - பொருளியல்

### 3. பணம் மற்றும் கடன்

1. "பொருள் வருகின்ற வழி சிறிதாயினும் கேடு இல்லை. போகின்ற வழி அதனை விடப் பெருகக் கூடாது" என பொருள் தரும் குறள்

A) செய்க பொருளை செறுநர் செருக்கறுக்கும் எஃகுஅதனின் கூரியது இல்.

B) ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒழுங்கு.

C) ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை.

D) அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு.

2. வணிகத்தின் முதல் வடிவம் _________.

A) பண்டமாற்றம் செய்யப்பட்ட பொருள்கள்

B) நாணயங்கள்

C) காகித பணம்

D) வங்கிகள்

3. கூற்று 1: நாகரிகங்கள் உருவான அனைத்துப் பகுதிகளிலும் பண்டமாற்று முறை செல்வாக்குப் பெற்றிருந்தது.

கூற்று 2: ஒரே நாகரிகத்திற்குள் மட்டுமல்லாமல் வேறு வேறு நாகரிகங்களுக்கு இடையிலும் பண்டமாற்று முறையில் பரிமாற்றம் நிகழ்ந்துள்ளது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

4. சிந்துவெளி நாகரிகக் காலகட்டத்தில் காணப்பட்ட பொருள்கள் கீழ்க்கண்ட அந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டன?

1. எகிப்து 2. ஈரான்

3. ஈராக் 4. ஜெர்மனி

A) அனைத்தும்

B) 1, 3

C) 1, 2

D) 2, 4

5. கூற்று 1: தமிழகத்தின் கிழக்குக் கடலில் இருந்து மிளகு மற்றும் நறுமணப்பொருள்கள், முத்து, ரத்தினங்கள், மாணிக்கம் மற்றும் மென்மையான பருத்தி ஆடைகள் போன்ற பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டன.

கூற்று 2: மிளகு மற்றும் நறுமணப்பொருட்கள் அதிகம் இடம்பெற்றதால் இந்த வணிகப்பாதை நறுமணப்பாதை என்றே அழைக்கப்பட்டது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

6. 'ருபியா' என்ற வெள்ளி நாணயம் யாருடைய காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது?

A) பாபர்

B) அக்பர்

C) ஷெர்ஷா சூரி

D) ஜஹாங்கீர்

7. ஷெர்ஷா சூரி காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ருபியா நாணயத்தின் எடை

A) 152 கிராம்

B) 168 கிராம்

C) 172 கிராம்.

D) 178 கிராம்

8. கீழ்க்கண்டவற்றுள் 'புராதன பணமாக' பயன்படுத்தப்பட்ட உலோகங்கள் எவை?

1. தங்கம் 2. இரும்பு

3. வெள்ளி 4. செம்பு

A) அனைத்தும்

B) 1, 2, 3

C) 1, 3, 4

D) 2, 3, 4

9. "ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும் பிறர் மதிக்கும்படிச் செய்வது பொருளே ஆகும்" என்னும் பொருளுடைய திருக்குறள்

A) இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

B) கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை



www.winmeen.com

விடாஅர் விழையும் உலகு.

C) பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க

நோதக்க நட்டார் செயின்.

D) பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்

பொருளல்லது இல்லை பொருள்

10. கூற்று: உலோகங்களே முதன் முதலில் பயன்படுத்தப்பட்ட பணம்.

காரணம்: பண்டைய காலத்தில் உலோகம் அரிய பொருளாகவும் நீண்ட காலம் பராமரிக்கக்கூடியதாகவும் மதிப்பு மாறாததாகவும் இருந்தது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி மற்றும் சரியான விளக்கம்

D) கூற்று காரணம் இரண்டும் சரி, ஆனால் சரியான விளக்கமல்ல

11. யாருடைய காலத்தில் வணிகக் குழுக்கள் தமக்கெனப் படைகள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்?

A) முற்கால சோழர்கள்

B) பிற்கால சோழர்கள்

C) முற்கால பாண்டியர்கள்

D) பிற்கால பாண்டியர்கள்

12. கி.மு 1100 காலக் கட்டத்தில் சீனர்கள் பயன்படுத்திய சிறு நாணயங்கள் ___________ல் செய்யப்பட்டிருந்தன.

A) இரும்பு

B) தங்கம்

C) வெள்ளி

D) வெண்கலம்

13. கீழ்க்கண்ட எந்த காலகட்டத்தில் மனிதன் பண்டமாற்று முறையைக் கையாண்டான்?

A) கி.மு. 9000

B) கி.மு. 600

C) கி.மு 1100

D) கி.மு. 1290

14. மத்திய தரைக்கடல் பகுதி முழுவதும் காகிதப் பணப்பரிவர்த்தனை பரவத் தொடங்கிய காலம்

A) கி.மு.1250

B) கி.மு. 600

C) கி.மு 1100

D) கி.மு. 1290

15. __________ காலக்கட்டத்தில் பரிவர்த்தனை–களுக்காக தங்க முலாம் பூசப்பட்ட நாணயம் ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

A) கி.பி. 1290

B) கி.பி. 1661

C) கி.பி. 1250

D) கி.பி. 650

16. _________ ஆண்டு மார்கோபோலோ பயணத்தால் காகிதப் பணம் ஐரோப்பிய நாடுகளில் பரவியது.

A) கி.பி.1200

B) கி.பி. 1250

C) கி.பி 1290

D) கி.பி. 1280

17. காகிதப் பணத்தை சுவீடன் வங்கிகள் அச்சடித்த ஆண்டு

A) கி.பி 1442

B) கி.பி 1556

C) கி.பி 1658

D) கி.பி. 1661

18. தந்தி மூலமான மின்னணு பணப்பரிவர்த்தனை முயற்சி மேற்கொள்ளப்பட்ட ஆண்டு

A) கி.பி. 1760

B) கி.பி.1826

C) கி.பி.1850

D) கி.பி.1860

19. கிரெடிட் கார்டை ________ என்பவர் உருவாக்கினார்.

A) ஜான் ஸ்டெப்பர்ட்

B) டொனால்ட் வெட்சல்

C) ஜான் பிக்கின்ஸ்

D) ஜாக் கில்பி

20. Near Field Communication பணப்பரிவர்த்தனை முறை _________ ஆண்டு இந்தியாவிற்கு வந்தது.

A) 2008

B) 2012

C) 2015

D) 2016

21. ஐரோப்பிய வங்கிகள் மொபைல் பேங்கை அறிமுகம் செய்த ஆண்டு

A) கி.பி.1992

B) கி.பி. 1995

C) கி.பி. 1996

D) கி.பி. 1999

22. கீழ்க்கண்டவற்றுள் இயற்கையான பணம் என்று அழைக்கப்படுவது எது/எவை?

1. தங்கம் 2. வெள்ளி

3. இரும்பு 4. வெண்கலம்

A) அனைத்தும்

B) 1, 2

C) 2, 3

D) 1, 4

23. கூற்று: தங்கம், வெள்ளிக்கு மாற்றாக குறைந்த மதிப்பு கொண்ட உலோகங்களைக் கொண்டு நாணயங்கள் தயாரிக்கப்பட்டு அவை சிறிய மதிப்பிலான பொருள்கள் வாங்கவும் விற்கவும் பயன்படுத்தப்பட்டன.

காரணம்: வணிகத்தின் விரிவாக்கத்திற்கு ஏற்ப தங்கம் மற்றும் வெள்ளி இருப்பு இருப்பதில்லை. அதே நேரத்தில் சுரங்கங்களிலும் தங்கம், வெள்ளி வரம்புக்குள் இருந்தன.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி மற்றும் சரியான விளக்கம்

D) கூற்று காரணம் இரண்டும் சரி, ஆனால் சரியான விளக்கமல்ல

24. கீழ்க்கண்டவற்றுள் எந்த பொருள்கள் பண்டமாற்றாகக் கொடுக்கப்பட்டதாகப் பொருளாதார அறிஞர்கள் கருதுகின்றனர்?

1. தோல் 2. மணிகள் 3. ஓடுகள்

4. புகையிலை 5. உப்பு 6. சோளம்

7. அடிமைகள்

A) அனைத்தும்

B) 1, 2, 4, 5

C) 2, 4, 5, 6, 7

D) 1, 3, 5, 6, 7

25. குறைந்த மதிப்பு நாணயங்களின் அடுத்த கட்டமாக __________ புழக்கத்திற்கு வந்தது.

A) மின்னணுப் பரிமாற்றம்

B) தங்க நாணயம்

C) காகிதப் பணம்

D) NFC

26. சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் ___________

____________ பெய்திரீஇ யற்று.

A) திறன் அறிந்து

B) பொருள் ஆக்கம்

C) செறுநர் செருக்கறுக்கும்

D) பசுமட் கலத்துள்நீர்

27. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

1. எந்த ஒரு பொருள் அல்லது சேவைக்கான கட்டணமாகவும் கடன்களைத் திருப்பி செலுத்துவதிலும் குறிப்பிட்ட நாடு முழுவதும் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு சரிபார்க்கப்பட்ட ஆவணம் காகிதப் பணம் ஆகும்.

2. இந்தியப் பணத்தில் "இதனைக் கொண்டிருப்பவரிடம்..... தொகை அளிப்பதற்கு உறுதி அளிக்கிறேன். I promise to pay the bearer the Sum of______rupees" என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் உறுதி அளிப்பதாக ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டு அதில் அவரது கையொப்பம் பொறிக்கப்பட்டிருக்கும்.

3. அந்தந்த நாட்டுப் பணத்தில் உயர் அலுவலர் கையொப்பமும் உறுதிமொழியும் இடம்பெற்றிருக்கும்.

A) 1 மட்டும் தவறு

B) 3 மட்டும் தவறு

C) 1, 3 தவறு

D) எதுவுமில்லை

28. 'பணத்தின் சிக்கலும் அதன் தீர்வும்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை யாருடையது?

A) ஜவஹர்லால் நேரு

B) அமர்த்தியாசென்

C) அம்பேத்கர்

D) மோதிலால் நேரு

29. இந்தியாவில் பணப்புழக்கத்தை ஒழுங்குபடுத்தும் பணியினை ____________ மேற்கொள்கிறது.

A) பிரதமர் அலுவலகம்

B) குடியரசுத் தலைவர் அலுவலகம்
C) நாடாளுமன்றம்
D) இந்திய ரிசர்வ் வங்கி

30. இந்திய ரிசர்வ் வங்கி எப்போது செயல்படத் தொடங்கியது?
A) ஏப்ரல் 1, 1937
B) ஜனவரி 1, 1937
C) ஏப்ரல் 1, 1935
D) ஜனவரி 1, 1935

31. இந்திய ரிசர்வ் வங்கி எப்போது நாட்டுடைமையாக்கப்பட்டது?
A) 1937
B) 1945
C) 1947
D) 1949

32. இந்தியாவில் அச்சடிக்கப்பட்டப் பணத்தில் ___________ சதவிகிதம் புழக்கத்தில் விடப்படுகிறது.
A) 50%
B) 65%
C) 85%
D) 90%

33. ___________ என்ற இணையதளத்தின் மூலமாக மாணவர்கள் கல்வி கடனுக்கு விண்ணப்பிக்கலாம்.
A) விஜய லட்சுமி கல்வி கடன் திட்டம்
B) வித்யா லட்சுமி கல்வி கடன் திட்டம்
C) சரஸ்வதி கல்வி கடன் திட்டம்
D) இந்திய அரசு கல்வி கடன் திட்டம்

34. கல்விக்கடன் குறித்தக் கூற்றுகளில் தவறானதைத் தேர்ந்தெடு
A) மாணவர் முதன்மைப் பயனாளி ஆவார்.
B) பெற்றோர், இணையர் அல்லது உடன்பிறந்தோர் ஆகியோர் இணை விண்ணப்பதாரர்.
C) இவை முழு நேர மற்றும் பகுதி நேர பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு அல்லது தொழில் படிப்புகளுக்காக வழங்கப்படுகின்றன.
D) ரூபாய் ஐந்து லட்சம் வரை கல்வி கடன் பெறுவதற்கு எவ்வித பிணையும் கேட்கப்படாது.

35. தற்போது உலகில் தயாரிக்கப்படும் பொருள்களில் _____________ விழுக்காடு விற்பனை அல்லது சேவைத் தொழிலை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன.
A) 50%
B) 60%
C) 70%
D) 90%

36. பணத்துக்கும் விலைக்கும் உள்ள தொடர்பு ___________ உடன் தொடர்புடையது.
A) பொருளாதார கொள்கை
B) வர்த்தக கொள்கை
C) பணவியல் கொள்கை
D) விநியோக கொள்கை

37. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
1. நாடுகளுக்கு இடையிலான பணம் செலாவணி என அழைக்கப்படுகிறது.
2. இந்தியாவின் செலாவணி ரூபாய் என்று அழைக்கப்படுகிறது.
3. உலக நாடுகளுக்கு இடையிலான செலாவணி ரூபாய் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது.
A) அனைத்தும் சரி
B) 1, 2 சரி
C) 2, 3 சரி
D) 1, 3 சரி

38. இந்தியாவில் __________ ஆண்டு முதன் முதலில் ஒரு ரூபாய் மற்றும் இரண்டு ரூபாய் நோட்டுகள் தயாரித்து வெளியிடப்பட்டன.
A) 1916 B) 1917 C) 1918 D) 1919

39. 500 ரூபாய் நோட்டை அறிமுகப்படுத்திய பின் இந்திய ரிசர்வ் வங்கி _________ ஆண்டு மீண்டும் ஒரு ரூபாய் நோட்டுகளை வெளியிட்டது.
A) 1938
B) 1940
C) 1942
D) 1945

40. ஆங்கிலேய அரசு _________ ஆண்டு மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள நாசிக்கில் அச்சகத்தை அமைத்தது.
A) 1915
B) 1920
C) 1922
D) 1925

41. மத்தியப்பிரதேசத்திலுள்ள தேவாஸில் ____________ ஆண்டு அச்சகம் தொடங்கப்பட்டது.

A) 1945

B) 1957

C) 1974

D) 1982

42. இந்திய ரிசர்வ் வங்கி, கர்நாடக மாநிலத்திலுள்ள மைசூரிலும், மேற்கு வங்காளத்திலுள்ள சல்பானியிலும் ரூபாய் மற்றும் வங்கிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அச்சடிக்க அச்சகங்கள் தொடங்கப்பட்ட ஆண்டு

A) 1980

B) 1982

C) 1986

D) 1990

43. கீழ்க்கண்ட எந்த நாடுகளின் பணம் இந்திய அச்சகங்களில் அச்சடிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன?

1. இலங்கை 2. பூடான்

3. ஈராக் 4. ஆப்பிரிக்கா

A) அனைத்தும்

B) 1, 2

C) 2, 3

D) 1, 4

44. கூற்று 1: இந்திய ரிசர்வ் வங்கியில் சுமார் பத்தாயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

கூற்று 2: பத்தாயிரம் ரூபாய் மதிப்புடைய நோட்டுகள் அச்சடிக்க இந்திய ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் இல்லை.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

45. தவறான இணையைத் தேர்ந்தெடு. (நாடு – செலாவணியின் பெயர்)

A) இந்தியா – ரூபாய்

B) இங்கிலாந்து – பவுண்டு

C) ஐராப்பிய ஒன்றியம் – யூரோ

D) ஆஸ்திரேலியா – ரியால்

46. பொருத்துக.

1. ஜப்பான் – i) யென்

2. சீனா – ii) யுவான்

3. சவுதி அரேபியா – iii) ரியால்

4. கனடா – iv) டாலர்

A) ii i iii iv

B) iv iii ii i

C) iii ii i iv

D) i ii iii iv

47. தவறான இணையைத் தேர்ந்தெடு.

1. மலேசியா – ரிங்கிட்

2. பாகிஸ்தான் – ரூபாய்

3. இலங்கை – டாலர்

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

C) 3 மட்டும் தவறு

D) எதுவுமில்லை

48. கூற்று 1: ஒரு நாட்டில் அனைத்து நுகர்பொருள்கள், தயாரிப்புகள், சேவைகள் என அனைத்துக்குமான மதிப்பினைக் கணக்கிடுவதில் பணம் பொதுவான, தரப்படுத்தப்பட்ட அலகாக இருக்க வேண்டும்.

கூற்று 2: ஒரு நாட்டில் நடைபெறும் நிதி பரிவர்த்தனைகளை அளவிடவும் கணக்குகளாக பராமரிக்கவும் பணம் பயன்படுகிறது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

49. கீழ்க்கண்ட எவற்றில் கடனுக்கான வட்டி குறைவாகவும், ஈடு வைக்கப்படும் பொருளுக்கான பாதுகாப்பு அதிகமாகவும் இருக்கும்?

1. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள்

2. கூட்டுறவு வங்கிகள்

3. முறைசாரா நிதி நிறுவனங்கள்

4. சுய உதவிக்குழுக்கள்

A) 1, 2

B) 2, 3

C) 1, 3

D) 2, 4

50. பண விநியோகம் எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது?

A) 2

winmeen.com

B) 3

C) 4

D) 5

51. தமிழ்நாட்டில் ___________ வங்கிக் கிளைகள் உள்ளன.

A) 9,012

B) 10,612

C) 10,718

D) 11,628

52. ஏப்ரல் 2017 – மார்ச் 2018 வரையிலான காலக்கட்டத்தில் கடன் வைப்புத் தொகை விகிதம்

A) 106.7%

B) 109.34%

C) 110.74%

D) 115.56%

53. பொருத்துக.

1. அமெரிக்க டாலர் – i) தானியங்கி இயந்திரம்

2. நாணய சுழற்சி – ii) பணத்தின் மாற்று

3. ஏ.டி.எம் – iii) சர்வதேச அங்கீகாரம்

4. உப்பு – iv) சவுதி அரேபியா

5. ரியால் – v) 85%

A) i iii v iv ii

B) v iv iii ii i

C) iii v i ii iv

D) iii i iv v ii

winmeen.com